# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சிபிஎஸ்இ 9- ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை கொண்டுவர வேண்டாம்; தேவைப்பட்டால், 5 அல்லது 6-ஆம் வகுப்புகளில் அந்தக் கொள்கையை அறிமுகப்படுத்தலாம்' என்று மத்திய அரசை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.
    i. ‘அவ்வாறு, 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்துவது மாணவர்களின் மன அழுத்தத்தை தேவையின்றி மேலும் அதிகரிப்பதாக அமையும்' என்று உச்சநீதிமன்றம் அப்போது சுட்டிக்காட்டியது.
    ii. சிபிஎஸ்இ பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் ஜூலை 1 முதல் மும்மொழி'பாடத் திட்டத்தைக் கட்டாயமாக்கி மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) அண்மையில் சுற்றறிக்கை வெளியிட்டது. தேசிய கல்விக் கொள்கை-2020 மற்றும் தேசிய பள்ளிக் கல்வி பாட செயல் திட்டம்-2023 ஆகியவற்றின் ஒரு பகுதியாக, சிபிஎஸ்இ இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. அதன்படி, மூன்று மொழிகளில், இரண்டு இந்திய மொழிகளை மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டும். வெளிநாட்டு மொழியை மூன்றாவது மொழியாகத் தேர்வு செய்யலாம். 10-ஆம் வகுப்பை பொருத்த வரை, மாணவர்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்கவும், கற்றலில் கவனத்தை நிலைநாட்டவும் மூன்றாவது மொழிக்கு பொதுத் தேர்வு நடத்தப்பட மாட்டாது. மூன்றாவது மொழிக்கான மதிப்பீடு, முற்றிலும் பள்ளிகள் அளவிலும், அக மதிப்பீடாகவும் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டது.
    iii. இந்நிலையில், பள்ளிகளில் ஏற்கெனவே வெவ்வேறு மொழிகளைத் தேர்வு செய்து படித்துவரும் மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்று, பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆட்சேபங்கள் எழுந்தன. அதைத் தொடர்ந்து, பள்ளிகளில் 7 முதல் 9- ஆம் வகுப்பு வரை தற்போது படித்துவரும் மாணவர்கள், மும்மொழிக் கொள்கையின் கீழ் அவர்கள் தற்போது தேர்வு செய்துள்ள மொழிப் பாட நடைமுறையையே 10-ஆம் வகுப்பு வரை தொடர மத்திய இடை நிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) அனுமதித்தது.

iv. இதனிடையே, தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய அரசின் ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளியை நிறுவுவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு சார்பில் தாக்கல்செய்யப்பட்ட மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

v. இந்தப் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்படும் என்பதால் தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

vi. நவோதயா பள்ளிகளைத் தொடங்குவது தொடர்பான விவகாரத்தில் பதிலளிக்க தமிழக அரசுக்கு மூன்று வார கால அவகாசம் அளித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

## 2. உக்ரைனின் புதிய பிரதமராக எரிசக்தி துறை நிபுணர் செர்ஜி கொரெட்ஸ்கி நியமிக்கப்பட்டார்.

i. அதேநேரம், நாட்டின் இளம் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது, அந்நாட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி, போராட்டங்களுக்கு வழிவகுத்துள்ளது.

ii. ரஷியாவுடன் உக்ரைன் கடந்த 4.5 ஆண்டுகளுக்கும் மேல் போரிட்டு வரும் நிலையில், அந்நாட்டு அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தனது போர்க்கால அமைசசரவையில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளார்.

iii. அதன்படி, முந்தைய பிரதமர் யூலியா ஸ்விரி டென்கோ பதவி யேற்ற ஓராண்டுக்குள் தனது பதவியை ராஜிநாமா செய்தார். தொடர்ந்து, அரசுக்குச் சொந்தமான ‘நாஃப்டோகாஸ்' எரிசக்தி நிறுவனத்தின் முன்னாள் சிஇஓ செர்ஜி கொரெட்ஸ்கி புதிய பிரதமராக நியமிக் கப்பட்டுள்ளார்.

iv. உக்ரைன் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், செர்ஜி கொரெட்ஸ்கிக்கு ஆதரவாக 289 எம்.பி.க்கள் வாக்களித்தனர். இதன்மூலம், ரஷிய போருக்குப் பிறகு உக்ரைனின் 3-ஆவது பிரதமராக அவர் தேர்வானார்.

v. மற்றொரு முக்கிய நகர்வாக, பாதுகாப்பு அமைச்சர் மிகைலோ ஃபெடோரோவை(35) ஸெலென்ஸ்கி பதவியிலிருந்து நீக்கியுள்ளார். வெறும் 6 மாதங்களே இப்பதவியில் நீடித்த ஃபெடோ ரோவின் நவீன சீர்திருத்தங்களுக்கும், சோவியத் காலத்து பாரம்பரிய ராணுவப் பின்னணியைக் கொண்ட ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல்

ஒலெக்சாண்டர் சிர்ஸ்கிக்கும்(60) இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடே இந்த நீக்கத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

3. மியான்மரின் ரோஹிங்கியா அகதிகள் பயணித்த 2 படகுகள் வங்கக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சுமார் 530 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

i. மியான்மரின் ரக்கீன் மாகாணத்தில் இருந்து புறப்பட்ட இப்படகுகளில், வங்கதேச அகதிகள் முகாம்களில் இருந்து வந்தவர்கள் உள்பட பெரும்பாலும் ரோஹிங்கியா முஸ்லிம்களே பயணித்ததாக சர்வதேச குடியேற்ற அமைப்பு, ஐ.நா.அகதிகள் ஆணையம் அறிக்கை வெளியிட்டுள்ளன.

ii. சுமார் 250 பேருடன் புறப்பட்ட முதல் படகு, பயணம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்துவிட்டது. 280 பேர் பயணித்ததாகக் கூறப்படும் 2-ஆவது படகு, ஜூலை 8- ஆம் தேதியன்று மியான்மரின் யேயர் வாடி கடற்கரை அருகே மூழ்கியதாக நம்பப்படுகிறது.

iii. இந்த விபத்துகள் மற்றும் உயிரிழப்பு விவரங்கள் இன்னும் அதிகாரபூர்வமாக வில்லை. உறுதிப்படுத்தப்பட மியான்மர் ராணுவத்தின் வன்முறைக்குத் தப்பி வங்கதேசத்தின் நெரிசல் மிகுந்த முகாம்களில் 12 லட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்கியா அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். வெளிநாட்டு உதவிகள் குறைக்கப்பட்டதாலும், சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலையிலும் இவர்கள் தவிக்கின்றனர்.

iv. இதனால், பாதுகாப்பற்ற சிறிய படகுகளில் மலேசியா போன்ற நாடுகளுக்கு ஆபத்தான கடல்வழிப் பயணங்களை மேற்கொண்டு, குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் அவலம் தொடர்கதையாகி வருகிறது.

4. ஈரானின் மின் நிலையங்கள் மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புகளை அமெரிக்கா தாக்கினால், செங்கடலின் முக்கிய நுழைவுவாயிலான பாப் எல் மண்டேப் நீரிணையை மூடுவதற்குத் தயாராக இருக்குமாறு யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்களை ஈரான் அறிவுறுத்தியுள்ளது.

i. ஈரானின் இந்த ரகசிய கோரிக்கையைத் தொடர்ந்து, யேமனின் மலைப்பகுதிகளில் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை நிலைநிறுத்தி, செங்கடல் பகுதியில் தாக்குதல் நடத்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் தயாராகி

வருகின்றனர்.

ii. உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோகத்தில் 20 சதவீ தத்தைக் கையாளும் ஹோர்முஸ் நீரிணை ஈரானால் ஏற்கெனவே மூடப்பட்டுள்ள நிலையில் 7 சதவீதம் பங்களிக்கும் செங்கடல் பாதையும் முடக்கப்பட்டால் மத்திய கிழக்கின் இரு முக்கிய எண்ணெய் ஏற்றுமதிப் பாதைகளும் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. ஹோர்முஸ் நீரிணை முடக்கத்துக்குப் பிறகு சவூதி அரேபியா தனது 70 சதவீத எரிபொருள் ஏற்றுமதியை செங்கடல் துறைமுகமான யான்பு வழியாகவே திருப்பிவிட்டுள்ள நிலையில், பாப் எல் மண்டேப் நீரிணையின் முடக்கம் உலகளாவிய பொருளாதாரத்திலும், எண்ணெய் சந்தையிலும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

iii. இதனிடையே, ஈரானின் வடக்குப் பகுதிகளிலும், தலைநகர் டெஹ்ரானைச் சுற்றியுள்ள இடங்களிலும் அமெரிக்க படைகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தின. இதற்குப் பதிலடியாக பஹ்ரைன், ஜோர்டான், குவைத் ஆகிய நாடுகளில் ஈரான் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

5. இந்தியப் பங்குச்சந்தை ஒழுங்காற்று வாரியம் (செபி), தனது இணையவழி குறைதீர்க்கும் 'ஸ்கோர்ஸ்' தளம் மூலம் கடந்த ஜூன் மாதத்தில் 5,000-க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களின் புகார்களுக்குத் தீர்வு கண்டுள்ளது.

i. முதலீட்டாளர்களிடமிருந்து ஜூன் மாதத்தில் புதிதாக 5,035 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அதே காலகட்டத்தில் 5,037 புகார்கள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. இதையடுத்து, நிலுவையில் உள்ள மொத்த புகார்களின் எண்ணிக்கை ஜூன் இறுதி நிலவரப்படி 5,537-லிருந்து 5,524 ஆக குறைந்துள்ளது.

ii. எனினும், ஆதித்யா பிர்லா மணி, ஃபினோலெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ், எச்பிஎல் பவர் சிஸ்டம்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு எதிராக அளிக்கப்பட்ட 17 புகார்கள், 3 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன.

iii. தற்போது நடைமுறையில் உள்ள மேம்படுத்தப்பட்ட 'ஸ்கோர்ஸ் 2.0' திட்டத்தின்கீழ், முதலீட்டாளர்கள் அளிக்கும் புகார்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நேரடியாக அனுப்பப்பட்டு, அவர்கள் 21 நாள்களுக்குள் நடவடிக்கை அறிக்கையை (ஏடி ஆர்) சமர்ப்பிக்க வேண்டும்.

iv. நிறுவனங்களின் பதிலில் திருப்தி இல்லாத முதலீட்டாளர்கள், 15

நாள்களுக்குள் முதல் நிலை மறுஆய்வுக்கும், அதிலும் அதிருப்தி இருந்தால் அடுத்த 15 நாள்களுக்குள் செபி தலையீட்டுடன் கூடிய 2-ஆம் நிலை மறுஆய்வுக்கும் விண்ணப்பிக்கலாம்.

v. கடந்த ஜூன் மாதத்தில், நிறுவனங்கள் நடவடிக்கை அறிக்கையைச் சமர்ப்பிக்க சராசரியாக 4 நாள்கள் மட்டுமே எடுத்துக் கொண்டன என்றும், முதல் நிலை மறுஆய்வுப் புகார்களைத் தீர்ப்பதற்கான சராசரி காலம் 8 நாள்களாக இருந்தது என்றும் செபி தரவுகள் தெரிவிக்கின்றன.

6. தூய எரிபொருளான ஹைட்ரஜன் மூலம் இயங்கும் நாட்டின் முதல் ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கவுள்ளார்.

i. பன்முக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இந்த ரயில், ஹரியாணா மாநிலம், ஜிந்த் - சோனிபட் இடையே இயக்கப்படவிருக்கிறது. இதன் மூலம் தூய எரிசக்திக்கு மாறும் இந்தியாவின் லட்சியப் பயணம் மற்றும் நிலையான-பசுமையான ரயில் போக்குவரத்துக்கான புதிய அத்தியாயம் தொடங்குகிறது.

ii. மேல்நிலை மின்கம்பிகளில் இருந்து மின்சாரத்தைப் பெறும் வழக்கமான மின்சார ரயில்களைப் போலல்லாமல், ஹைட்ரஜன் ரயிலானது ஹைட்ரஜன்-ஆக்ஸிஜன் வேதிவினை மூலம் ரயிலுக்குள்ளேயே மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்தும்.

iii. 1,200 கிலோவாட் திறன் கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல உந்துவிசை அமைப்பின் மூலம் இயங்கும் இந்த ரயில், மணிக்கு 75 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் செல்லும். 10 பெட்டிகளுடன் சுமார் 2,600 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டதாகும். ஜிந்த்- சோனிபட் நகரங்களுக்கு இடையிலான 89 கி.மீ. தொலைவை 2 மணிநேரத்தில் கடக்கும்.

iv. ஹைட்ரஜன் கசிவுகள், வெப்பம், தீப்பிழம்புகள், புகையை முன்கூட்டி கண்டறியும் பன்முகப் பாதுகாப்பு அமைப்புகளுடன், பாதுகாப்பான ரயில் என்ற சிறப்பையும் கொண்டுள்ளது. ஹரியாணா மாநிலம், ஜிந்த் நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கிவைக்கவுள்ளார்.

v. வெகுசில நாடுகளின் வரிசையில்...:

- புதைபடிம எரிபொருள்களை எரிக்கும்போது கார்பன் டைஆக்சைடு, கந்தக ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு போன்ற தீங்கு விளைவிக்கும்

மாசுபடுத்திகள் வெளியாகும். அதேநேரம், ஹைட்ரஜன் எரிக்கப்படும்போது இத்தகைய மாசுபடுத்திகள் உருவாவதில்லை என்பதால், 'தூய எரிபொருள்' என்ற சிறப்பை பெற்றுள்ளது.

- தற்போதைய ஹைட்ரஜன் ரயில் சேவை தொடக்கத்தின் மூலம் இந்த வகையான ரயில்களை ஏற்கெனவே இயக்கும் அல்லது இயக்கத்துக்கான முன்னோட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள ஜெர்மனி, பிரான்ஸ், சீனா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய வெகுசில நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது. உலகின் ஹைட்ரஜன் ரயில் இயக்கத்துக்கான முன்னோடி நாடு ஜெர்மனி ஆகும். இங்கு கடந்த 2018-இல் உலகின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் தற்போது 99 சதவீதத்துக்கும் மேற்பட்ட அகல இருப்புப் பாதை வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், மாசில்லா ரயில் இயக்கத்துக்கான அடுத்தகட்ட பாய்ச்சலை இந்திய ரயில்வே முன்னெடுத்துள்ளது.

7. புது தில்லி-காஜியாபாத் உயர்நிலை பாலத்துக்கு ‘ராம் சேது' என காஜியாபாத் மாநகராட்சி பெயர் சூட்டியுள்ளது.

i. மேலும், 11 கி.மீ. நீளமுடைய இந்த உயர்நிலைப் பாலத்தின் தில்லி நுழைவாயிலில் ‘வில் மற்றும் அம்பு' சின்னத்தை காஜியாபாத் மாநகராட்சி கட்டமைக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்து காஜியாபாத் மாநகர மேயர் சுனிதா தயாள் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'ராம் சேது உயர்நிலைப் பாலத்தின் நுழைவாயில் ரூ.1 கோடி மதிப்பில் அமைக்கப்படுகிறது. கலாசார அடையாளத்தை பிரதிபலிக்கும் இந்த நுழைவாயில் தில்லியில் இருந்து காஜியா பாதுக்குள் நுழையும் மக்களை பிரம்மாண்டமாக வரவேற்கும் வகையில் கட்டமைக்கப்படவுள்ளது' என்றார்.

ii. ரூ.1,147 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்பட்ட ராம் சேது உயர்நிலைப் பாலத்தை 2018, மார்ச் 30-ஆம் தேதி உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் திறந்து வைத்தார். இத்திட்டத்தால் தில்லி மற்றும் காஜியாபாத் இடையேயான பயண நேரம் வெகுவாகக் குறைந்துள்ளது.

8. உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34-இல் இருந்து 38-ஆக

அதிகரித்து பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவை, எதிர்வரும் மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு கொண்டுவரவுள்ளது.

i. ஜூலை 20-ஆம் தேதி தொடங்கவுள்ள மழைக்கால கூட்டத் தொடர், ஆகஸ்ட் 13-ஆம் தேதி வரை நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ii. உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956–இல் இயற்றப்பட்டபோது, தலைமை நீதிபதி தவிர்த்து பிறநீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 10 என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டது. 1960-இல் சட்டத் திருத்தம் மூலம் இந்த எண்ணிக்கை 13-ஆகவும், 1977-இல் அடுத்த சட்டத் திருத்தம் மூலம் 17-ஆகவும் உயர்த்தப்பட்டது.

iii. 1986-இல் மீண்டும் திருத்தச் சட்டம் மேற்கொள்ளப்பட்டு, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17-லிருந்து 25-ஆக உயர்த்தப்பட்டது. 2009-இல் இந்த எண்ணிக்கை 30-ஆகவும், 2019-இல் தலைமை நீதிபதி உள்பட நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆகவும் உயர்த்தப்பட்டது.

iv. இந்நிலையில், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34– இல் இருந்து 38-ஆக உயர்த்தும் வகையில் சட்டத்திருத்த மசோதா கொண்டுவர மத்திய அமைச்சரவை கடந்த மே மாதம் ஒப்புதல் வழங்கியது. ஆனால், உடனடியாக அவசர சட்டம் கொண்டு வரப்பட்டு, நீதிபதிகளின் எண்ணிக்கை 38–ஆக உயர்த்தப்பட்டது. அவசர சட்டம் பிறப்பிக்கப் பட்ட பிறகு உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

v. எந்தவொரு அவசர சட்டமும் ஆறு மாத காலம் செல்லுபடியாகும் நிலையில், நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கிவிட்டால், 6 வாரங்களுக்குள் அது தொடர்பான சட்ட மசோதாவை நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், அவசர சட்டம் காலாவதியாகிவிடும். அதன்படி, எதிர்வரும் மழைக்கால கூட்டத் தொடரில், அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவை மத்திய அரசு கொண்டுவர உள்ளது.

vi. எதிர்க்கட்சிகளின் தீர்மானம் ஏற்பு:

- நாடாளுமன்ற அமர்வு நடைபெறாதபோது, தனது நிர்வாக அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு அவசர சட்டத்தைப் பிறப்பித்து, அதன் பின்னர் சட்ட மசோதாவை கொண்டுவரும் போது, எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் சமர்ப்பிப்பது நடைமுறையாகும்.
- இது, சட்ட மசோதா மீது எதிர்க்கட்சிகள் விவாதிக்க வாய்ப்பளிக்கும். அதன்படி, அவசர சட்டத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் தீர்மானம்

ஏற்றுக்கொள்ளப்பட்டதாக, மக்களவையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. இ20 பெட்ரோல் பயன்படுத்தியதால் காரில் ஏற்பட்ட பிரச்னைக்கு வாகன தயாரிப்பு நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று ராய்பூர் நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டது.

i. பெட்ரோலில் எத்தனால் கலப்பால் வாகனங்களில், முக்கியமாக சற்று பழைய வாகனங்களில் பல பிரச்னைகள் ஏற்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு எத்தனால் கலப்பு பெட்ரோலை (இ20) தொடர்ந்து ஆதரித்து வருகிறது. இந்தச் சூழலில் தீர்ப்பாயத்தின் உத்தரவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தியாவில் இ20 பெட்ரோலுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள முதல் தீர்ப்பு இதுவாகும்.

ii. முன்னதாக, சத்தீஸ்கர் தலைநகர் ராய்பூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் மாருதி சுஸுகி கிராண்ட் விட்டாரா ஸ்ட்ராங் ஹைப்ரிட் கார் உரிமையாளர் ஒருவர் மனு தாக்கல் செய்தார்.

iii. அதில் இ20 பெட்ரோல் (20% எத்தனால் கலந்த பெட்ரோல்) பயன்படுத்திய பிறகு, வாகனத்தில் தொடர்ந்து என்ஜின் கோளாறுகள் ஏற்பட்டதாகவும், அதிகாரபூர்வ விற்பனை நிலையத்தில் பல முறை காரை பழுது பார்த்தும் பிரச்னைகள் தொடர்வதாகவும் புகார் தெரிவித்தார். இதை விசாரித்த நீதிமன்றம் கார் உரிமையாளர் தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்டது.

iv. மாருதி சுஸுகி நிறுவனமும், கார் விற்பனை நிறுவனமும், இ20-க்கு முழுமையாக பொருந்தக் கூடிய அதே 'மாடல்' புதிய வாகனத்தை வழங்க வேண்டும் அல்லது ரூ.21.6 லட்சம் வரை இழப்பீடு வழங்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டது.

10. ஒடிஸாவில் உலகப் புகழ் பெற்ற புரி ஜெகந்நாதர் கோயில் ரத யாத்திரை கோலாகலமாகத் தொடங்கியது.

i. புரி நகரில் பலத்த மழையையும் பொருள்படுத்தாமல் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். ரத யாத்திரையையொட்டி, பல அடுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ii. ஒடிஸாவில் உள்ள கடற்கரை நகரான புரியில் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற ஜெகந்நாதர் கோயில் உள்ளது. இக்கோயிலில்

ஆண்டுதோறும் நடைபெறும் ரத யாத்திரை உலகப் புகழ் பெற்றதாகும். இந்த விழாவில், ஜெகந்நாதர், அவரது சகோதரர் பலபத்திரர், சகோதரி சுபத்திரை ஆகிய மூன்று கடவுள்களின் அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்ட ரதங்கள், பிரதான கோயிலில் இருந்து 2.6 கி.மீ. தொலைவில் உள்ள அவர்களின் பிறப்பிடமாக கருதப்படும் குந்திச்சா கோயில் வரை இழுக்கப்படும். 9 நாள்களுக்குப் பின்னர் மீண்டும் பிரதான கோயிலுக்குமூன்று ரதங்களும் திரும்பும்.

11. இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உயர்கல்வியின் தற்போதைய நிலை - மாணவர் சேர்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களின் அவசியத்தை மையமாகக் கொண்டது.

(i) மாணவர் சேர்க்கை புள்ளிவிவரங்கள் மற்றும் பிராந்திய ஒப்பீடு

- 2023–24 கல்வியாண்டிற்கான ஆய்வின்படி, உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 50% என்ற மைல்கல்லைக் கடந்துள்ளது.
- 18 முதல் 23 வயதுக்குட்பட்ட 68.4 லட்சம் இளைஞர்களில், சுமார் 35.8 லட்சம் பேர் (52.3%) உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர்.
- இந்தச் சேர்க்கை விகிதம் முந்தைய ஆண்டை விட 3.2% அதிகமாகும்.
- 53% சேர்க்கை விகிதத்துடன் டெல்லி நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது; அதைத் தொடர்ந்து தமிழ்நாடு உள்ளது. உத்தரகண்ட் (48.5%), தெலுங்கானா (46.6%), இமாச்சலப் பிரதேசம் (46.4%) மற்றும் சிக்கிம் (46.4%) ஆகியவை சிறப்பாகச் செயல்படும் பிற மாநிலங்களாகும்.

(ii) மாநில அரசின் நலத்திட்டங்களின் தாக்கம்

- 'புதுமைப் பெண்' திட்டம்: அரசுப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வழங்கப்படும் மாதந்தோறும் ரூ. 1,000 உதவித்தொகை உள்ளிட்ட அரசின் நீண்டகால முயற்சிகளே தமிழ்நாட்டின் உயர் சேர்க்கை விகிதத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

(ii) உள்கட்டமைப்பு மற்றும் மாணவர் சேர்க்கை இடைவெளி

- தமிழ்நாட்டில் 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன; இவற்றில் மொத்தம் 1,26,959 இடங்கள் உள்ளன.
- ஜூலை 11 நிலவரப்படி, 83,276 மாணவர்கள் (65.59%) மட்டுமே இக்கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். இறுதிச் சேர்க்கை விகிதம்

அதிகபட்சமாக 70% மட்டுமே இருக்கும் என்று நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

- அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை, பேராசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் நவீன ஆய்வகங்கள் இல்லாதது போன்ற காரணங்களால், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தனியார் கல்லூரிகளை அதிகம் விரும்புகின்றனர்.

(iii) நிர்வாக நெருக்கடி: மாநிலப் பல்கலைக்கழகங்களில் காலிப் பணியிடங்கள்

- ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் இடையே நிலவும் மோதல் காரணமாக, 22 மாநிலப் பல்கலைக்கழகங்களில் 16 பல்கலைக்கழகங்கள் தற்போது துணைவேந்தர்கள் (VCs) இல்லாமலே செயல்படுகின்றன.
- ஜனவரி 2027-க்குள், 20 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படாத நிலை ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- துணைவேந்தர்கள் இல்லாததால் பேராசிரியர்கள் நியமனம், பதவி உயர்வு, ஆராய்ச்சி ஒப்புதல்கள் மற்றும் முக்கிய நிதி சார்ந்த முடிவுகள் எடுப்பது ஆகியவை முடங்கியுள்ளன; இது மாணவர்களின் எதிர்காலத்தைப் கடுமையாகப் பாதிக்கிறது.

(iv) ஆசிரியர் பணியிடங்கள் குறித்த புள்ளிவிவரங்கள்

பல்வேறு மாநிலப் பல்கலைக்கழகங்களில் 50%-க்கும் அதிகமான பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன:

- சென்னை பல்கலைக்கழகம்:உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் 67.9%-ம், இணைப் பேராசிரியர் பணியிடங்களில் 85%-ம், பேராசிரியர் பணியிடங்களில் 43%-ம் காலியாக உள்ளன.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்: அனுமதிக்கப்பட்ட 50 பேராசிரியர் பணியிடங்களில் தற்போது இரண்டு மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன; இணைப் பேராசிரியர் பணியிடங்களுக்கான காலிப்பணியிடங்களின் அளவு 86.1%-ஐ எட்டியுள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம்:பேராசிரியர் பணியிடங்களில் 62.6%-ம், இணைப் பேராசிரியர் பணியிடங்களில் 67.5%-ம் காலியாக உள்ளன.

(v) தரம், தரவரிசை மற்றும் வேலைவாய்ப்புத் திறன் குறித்த தகவல்கள்

- பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும், மாநிலத்தில் உள்ள 50%-க்கும் மேற்பட்ட பொறியியல் பட்டதாரிகள் தகுந்த வேலைவாய்ப்பைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர். சராசரியாக,

அனைத்துக் கல்லூரிப் பட்டதாரிகளிலும் 30% பேர் மட்டுமே தங்கள் தகுதிக்கு ஏற்ற வேலைகளைப் பெறுகின்றனர்.

- தேசியக் கல்விக் கொள்கையை (NEP) செயல்படுத்தாத மாநில அரசின் முடிவால், NAAC (தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் குழு) மதிப்பீடுகளில் தமிழ்நாட்டுக் கல்லூரிகள் 1,000 புள்ளிகளில் 100 புள்ளிகளை இழப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- இத்தகைய தரவரிசை இழப்புகள், உயர்தர ஆராய்ச்சிக்கான நிதியுதவியைப் பெறும் மாணவர்களின் திறனைப் பாதிக்கக்கூடும் என்று கல்வி நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

(vi) முடிவுரை மற்றும் உத்திசார் பரிந்துரைகள்

மாணவர் சேர்க்கையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் அர்த்தமுள்ளதாக அமைய, உயர்கல்வியை அரசு மிக முக்கிய முன்னுரிமையாகக் கருத வேண்டும். அதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:

1. நிர்வாகச் சிக்கல்களைத் தீர்க்க உடனடியாகத் துணைவேந்தர்களை நியமித்தல்.
2. மாநிலம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் பெருமளவில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்.
3. அரசுக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஆய்வகங்களை நவீனமயமாக்குதல்.
4. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் வகையில், நவீனத் தொழில் துறைத் தேவைகளுக்கு ஏற்பப் பாடத்திட்டங்களைப் புதுப்பித்தல்.

## 12. வளங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதிக்கத்திற்கான தீவிரமான உலகளாவிய போட்டி, புவிசார் அரசியல் மற்றும் சுற்றுச்சூழலை மாற்றியமைத்து வருகிறது.

(i) உலகளாவிய புவிசார் அரசியல் மற்றும் கூட்டணிகளில் மாற்றம்

- ஒவ்வொரு நாடும் தனது எதிர்காலத்தைப் பாதுகாத்துக்கொள்ள, தனக்கான பொருளாதாரப் பாதையை வகுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.
- அதிகாரத்திற்கான உலகளாவிய தேடல், உலகை மேலும் மேலும் சர்வாதிகாரப் போக்குடையதாக மாற்றி வருகிறது.
- வெனிசுலா மற்றும் கிரீன்லாந்து போன்ற நாடுகளின் மீது செல்வாக்கு செலுத்துவதற்கான போட்டியில், சீனா மற்றும் அமெரிக்கா இடையிலான பதற்றங்கள் வெளிப்படுகின்றன.

- நாடுகளுக்கு இடையிலான தீவிரமான போட்டி, காலநிலை மாற்றம் போன்ற இருத்தலியல் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான உலகளாவிய ஒத்துழைப்பைக் குலைக்கத் தொடங்கியுள்ளது.

(ii) தொழில்நுட்பம் மற்றும் ஆற்றல் சார்ந்த போட்டி

- பாரம்பரிய உள் எரிப்பு தொழில்நுட்பங்கள் (எண்ணெய், எரிவாயு மற்றும் நிலக்கரி மூலம் இயங்குபவை) மற்றும் வளர்ந்து வரும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மின்சார வாகனத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான போட்டியே சர்வதேச பதற்றத்திற்கான முக்கிய காரணமாக உள்ளது.
- எண்ணெய் வளங்கள் நிறைந்த நாடுகளுக்கும், "மின்சார ஆற்றல் சக்திகளாக" (electricity powers) உருவெடுக்கும் நாடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க பிளவு உருவாகி வருகிறது.
- காலநிலை மாற்றத்தைத் தணிப்பது என்பது இனி ஆற்றல் மாற்றத்தைப் பற்றியது மட்டுமல்ல; அரிய வகை கனிமங்கள், நிலக்கரி மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விநியோகச் சங்கிலிகளை எந்த நாடுகள் கட்டுப்படுத்துகின்றன என்பதன் மூலமே இது தீர்மானிக்கப்படுகிறது.

(iii) புவியியல் உண்மைகள்: ஆர்க்டிக் எல்லைப்பகுதி

- காலநிலை மாற்றம் காரணமாக ஆர்க்டிக் பனி உருகி வருவதால், ஆர்க்டிக் பகுதி வழியாக புதிய மற்றும் விரைவான கப்பல் போக்குவரத்துப் பாதைகள் உருவாகின்றன.
- மேற்கு அரைக்கோளத்தை விரைவாகச் சென்றடைவதற்கு இந்தப் பாதைகள் மிகவும் சாதகமானவை என்று ரஷ்யாவும் சீனாவும் கருதுகின்றன.
- பனி உருகுவதால், முன்பு அணுக முடியாத நிலையில் இருந்த எண்ணெய் மற்றும் கனிம வளங்கள் வெளிப்படுகின்றன; இது அப்பகுதியில் வளங்களைச் சுரண்டுவதற்கான புதிய அலைக்கு வழிவகுக்கிறது.

(iv) முக்கியமான கனிமங்களுக்கான உலகளாவிய போட்டி

- மின்சார உள்கட்டமைப்பு, பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவற்றின் விரிவாக்கத்தால், அடுத்த 10 ஆண்டுகளில் செம்புக்கான (Copper) உலகளாவிய தேவை இரட்டிப்பாகும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- பெரு, சிலி மற்றும் காங்கோ போன்ற கனிம வளம் மிக்க நாடுகளின் பக்கம் சர்வதேச கவனம் திரும்பியுள்ளது.

- தேவையைப் பூர்த்தி செய்ய, அடர்ந்த காடுகள் மற்றும் அதிக பல்லுயிர் வளம் கொண்ட பகுதிகளில் புதிய சுரங்கங்கள் திறக்கப்படுகின்றன.
- தற்போது உலகின் செம்பு உற்பத்தியில் சுமார் 50 சதவீதத்தை சீனா பதப்படுத்துகிறது; மேலும் பசுமைத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதில் அது உலகளவில் முன்னணியில் உள்ளது.
- லித்தியம் மற்றும் கிராஃபைட் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்திற்கு அவசியமான பிற அரிய கனிமங்களுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது.

(v) பொருளாதாரக் கூட்டமைப்புகள் மற்றும் சர்வதேச வர்த்தகம்

- மெர்கோசூர் (Mercosur): மெர்கோசூர் (ஸ்பானிஷ் மொழியில்: Mercado Común del Sur) என்பது ஒரு தென் அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பாகும்.
- வருமானப் பாதுகாப்பு, சந்தை நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் தரநிலைகள் குறித்த கவலைகள் காரணமாக, ஐரோப்பிய ஒன்றிய விவசாயிகள் தற்போது மெர்கோசூருடனான வர்த்தக ஒப்பந்தங்களை எதிர்க்கின்றனர்.
- டாவோஸில் (2026) நடைபெறும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டம், பல்வேறு நாடுகளின் பொருளாதார இலக்குகளுக்கு இடையே ஆழமடைந்து வரும் முரண்பாடுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

(vi) முரண்பட்ட தேசிய முன்னுரிமைகள்

- முன்னுரிமைகளில் கூர்மையான வேறுபாடு - அமெரிக்கா தொடர்ந்து புதைபடிவ எரிபொருட்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது, அதே நேரத்தில் சீனா பசுமை உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், முக்கிய கனிமங்கள் மற்றும் பசுமை நிதி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- பல நாடுகள் "நட்பான" எரிசக்தி வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், நிலையான தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகளைப் பராமரிப்பதற்கும் இடையிலான ஒரு போராட்டத்தில் சிக்கியுள்ளன.

இந்த இடைவிடாத போட்டி ஒரு "புதிய உலகத்தை" வேகமாக உருவாக்கி வருகிறது, இருப்பினும் இந்த புதிய ஒழுங்கு பூமிக்கும் அதன் மக்களுக்கும் நன்மை பயக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.